# என் மகனாகிய! அப்சலோமே!

# என் மகனே! என் மகனே!



AN ARTICLE BY
PR. ROMILTON, DELHI

# என் மகனாகிய அப்சலோமே !
# என் மகனே ! என் மகனே !
### [ Part - 1 ]

## அம்னோன்

இதோ ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார்...

ராஜா தம்முடைய குமாரனுக்காக மனம் நொந்திருக்கிறார்...

ராஜா மகா சத்தமாய்..."என் மகனே! என் மகனே!" என்று அலறிக்கொண்டிருக்கிறார்.. ( 2 சாமு 19:1,2,4)

தன் வாலிப மகனாகிய அப்சலோமுக்காக இருதயம் தாங்கலடைந்து, மனம் நொந்து, அழுது புலம்பி, மகா சத்தமாய் அலறிக் கொண்டிருந்த தாவீதின் சத்தமிது!

அன்று தன் குமாரனாகிய அப்சலோமுக்காக அழுது புலம்பிய தாவீதின் சத்தம் மட்டுமல்ல இது...இன்றும் தமது சபையின் வாலிப மக்களுக்காக அழுது புலம்பும் தாவீதின் குமாரனாகிய இயேசுவின் சத்தமும் இதுவே!

என் மகனே! என் மகளே!
என் மகனாகிய அப்சலோமே !

அப்சலோமின் கதை ஒரே நாளில் நடந்து முடிந்த கதையல்ல... அதற்குள் உட்செல்லுமுன், சற்று பின்னோக்கிப் பார்ப்பது, தாவீதின் வீட்டினுள் மட்டுமல்ல, இன்றைய சபையாகிய தேவனுடைய வீட்டின் உள்ளறைகளுக்குள்ளும் நம்மை இட்டுச் செல்கிறது..

தாவீதின் மூன்று குமாரர்கள்

அம்னோன்..
அப்சலோம்..
அதோனியா...

தாவீதுக்குக் குமாரர் குமாரத்திகள் பலர் இருந்தாலும், அவனது இந்த மூன்று குமாரரின் கதைகளும் சம்பவங்களும் முற்றிலும் வித்தியாசமானவை மட்டுமல்ல, அவைகள் அவனது இருதயத்தை உடைத்துப் பிழிந்து, இன்றும் வழிவழியாய் வந்து கொண்டிருப்பவைகளே!

# 1.அம்னோன்

தினந்தோறும் அம்னோன் என்ற தன் குமாரனுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்த தாவீது ! (2 சாமு 13:37)

- தாமார் என்னும் தன் ஒன்று விட்ட சகோதரியின் மேலேயே ஆசை வைத்த அம்னோன்..

- அவள் மேல் மோகம் கொண்ட அம்னோன்..
- அவள் மேல் ஏக்கம் கொண்ட அம்னோன்..
- ஏக்கத்தினால் வியாதிப்பட்ட அம்னோன்..

சவுந்தர்யமுள்ளவள் சகோதரியேயானாலும் அவள் மேலும் ஆசை கொள்ள வைக்கும் கொள்ளை அழகு !
உடன் வாழும் குடும்பத்தின் அங்கமேயானாலும் அவள் மேலும் மோகம் கொள்ள வைக்கும் மோகனம்!
ஆசை மோகமாகி... மோகம் ஏக்கமாகி..
ஏக்கம் வியாதிப்படுக்கையில் வீழ்த்தியது அம்னோனை ...

பார்க்க வருகிறான், யோனதாப் என்ற மகா தந்திரவாதியாகிய சிநேகிதன் ஒருவன்.. கேட்டான்..

"ராஜகுமாரனாகிய நீ நாளுக்கு நாள் எதினாலே இப்படி மெலிந்து கொண்டே போகிறாய்? எனக்குச் சொல்லமாட்டாயா?" (2 சாமு 13:4)

"என் சகோதரியாகிய தாமார் மேல் ஆசை வைத்திருக்கிறேன்" என்கிறான் அம்னோன்..

அவளை அடைய திட்டமொன்று உடனே தயாராகிறது..

" நீ வியாதிக்காரனைப்போல உன் படுக்கையிலே படுத்துக்கொள். உன்னைப் பார்க்கிறதற்கு உன் தகப்பனார் வரும் போது, "என் சகோதரியாகிய தாமார் தன் கையினாலே எனக்குப் பணியாரம் செய்து கொடுக்கும்படி அவளை அனுப்பும்படி நீர் தயவு செய்ய வேண்டும் என்று சொல்.."

இட்ட திட்டத்தின்படியே யாவும் நடக்க, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தன் மோகத்தைத் தீர்த்துக் கொண்டு தாமாரைத் தீட்டுப்படுத்தி, துரத்தியும் விடுகிறான் அம்னோன்.

ராஜகுமாரத்திகளின் வஸ்திரமாகிய தன் பல வர்ண வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, தன் தலையில் சாம்பலை அள்ளிப்போட்டு, தெருவெல்லாம் கதறிக் கூக்குரலிட்டுத் தன் சொந்த சகோதரனாகிய அப்சலோமின் வீட்டில் அடைக்கலம் புகுகிறாள் தாமார்..

தன் உடன்பிறந்த தங்கை அல்லவா?

தன் நெஞ்சிலே வஞ்சகத்தை வைத்து, இரண்டு வருடமாய்க் குமுறிக் கொண்டிருந்த அப்சலோம், சமயம் பார்த்து அம்னோனை ஆள் வைத்து அடித்துக் கொலை செய்து பழிதீர்த்துக் கொள்கிறான். (2 சாமு 13:1-29)

அம்னோனின் விபரீத ஆசையும், தன்னையே வஞ்சித்த வஞ்சனையும், தன் மகளைக் கற்பழித்த வன்உணர்வும் தெரிய வந்தபோது வெகு கோபமாய்ப் பற்றியெரிந்த தாவீது, அம்னோன் பட்டப்பகலில் கொலை செய்யப்பட்ட பிறகு தன் ராஜகுமாரனுக்காகத் தினந்தோறும் துக்கித்துக் கொண்டிருந்தான். (2 சாமு 13:37)

தாவீதின் முதல் வாலிப மகன் இந்த அம்னோன்..
தாவீது தினந்தோறும் தன் வாலிப மகனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

வாலிப மகனே ! மகளே !
இன்றும் தாவீதின் குமாரனாகிய இயேசு, தமது சபையின் வாலிபச் செல்வங்களுக்காகத் தினந்தோறும் துக்கித்துக் கொண்டிருக்கிறார்..

காரணம்..சபையாம் கிறிஸ்துவின் குடும்பத்துக்குள் வாலிபப் பிள்ளைகளில் காணப்படும் விபரீத ஆசைகள், மோகங்கள், ஏக்கங்கள், காதல் ரோகங்கள்.

▸ சபையின் வாலிபப் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சகோதர சகோதரிகள் இல்லையோ?

▸ அழகில் மயங்கி, நிறத்திலும் வரத்திலும், வனப்பிலும் சிரிப்பிலும் மதிமயங்கி, மனம் லயித்து ஒரே சபைக்குள்ளே சகோதரி என்றும் சகாதரனென்றும் பாராமல் ஆசை வைத்து, மோகம் கொண்டு, ஏக்கமுற்று, காமரோகம் கண்டு, காதல் கிறுக்கர்களாகிப் போன விசுவாச வாலிபர்கள் எத்தனை எத்தனை! (2 சாமு 13:1-13)

ஆசையும் மோகமும் ஏக்கமும் அடையாமல் விடுமோ? இதனால் சீரழிந்த சபையின் வாலிபப் பிள்ளைகள்தான் எத்தனை எத்தனை!

▸ ராஜகுமாரரைப் போன்ற நமது வாலிபர்கள், இந்த ஒரே ஒரு வியாதியினாலே ஆவியிலும் சரீரத்திலும் ஊழியத்திலும் நாளுக்கு நாள் உள்ளுக்குள்ளேயே தங்கள் ஆவிக்குரிய வாழ்விலே மெலிந்து கொண்டே போகிறதில்லையோ? (13:4)

▸ வியாதிக்காரனைப் போல இந்த வியாதி, அநேக விசுவாச வாலிபர்களை ஆவியில் படுத்த படுக்கையாக்கிக் கட்டில் கிடையாக்கி விடவில்லையோ?

▸ "அந்த சகோதரியே வந்து என்னைத் தாலாட்டி, சீராட்டி ஜெபிக்க வர வேண்டும்" என்று ஏங்கிக் கிடக்கும் அம்னோன்கள் இங்கே இல்லையோ? (13:5)

▸ இன்றைய அம்னோன்களுக்கு ஆலோசகர்களான மகாத் தந்திர யோனதாப்களான சக விசுவாச நண்பர்களும் இங்கே இல்லையோ?

▸ "அவள் உன்னை ignore பண்ணினாலென்ன ? நீ விடாம அவ பின்னால போய்க்கிட்டேயிரு..." என்று நமது நவீன அம்னோன்களுக்கு ஆலோசகர்களான யோனதாப்களுக்கும் இங்கே பஞ்சமோ?

மாவெடுத்துப் பிசைந்து, அவன் கண்களுக்கு முன்பாகத் தட்டி, பணியாரங்களைச் சுட்டு, சட்டியை எடுத்து அவனுக்கு முன்பாக வைத்துப் பரிமாற வந்த தாமாரின் ஒவ்வொரு அசைவையும் கண்டு சொக்கிப்போன அம்னோனைப்போல,

சந்தர்ப்பம் பார்த்துத் தவம் கிடக்கும் அம்னோன்களே! சபையின் தாமார்களின் ஒவ்வொரு அசைவும் உங்களைச் சுண்டியிழுக்கின்றனவோ?

ராஜகுமாரத்திகளைப் போன்ற சபையின் ஆவிக்குரிய தாமார்களின் முகபாவனைகளும், பாடும் குரல் வளமும், வசனம் வாசிக்கும் மிடுக்கும், போட்டிகளில் கலந்து பரிசைத்தட்டிச் செல்லும் வேத அறிவும்,வரங்களும் தாலந்துகளும், சபையிலே சுற்றிச் சுற்றி வளையவரும் நளினங்களும், கண்ணசைவும், கையசைவும், அவர்களை உங்கள் இதயத்தின் உள்ளறை வரைக்கும் இழுத்துச் செல்கிறதோ?

தங்கள் சிந்தைகளிலே இந்தப் பாவத்துக்குள் கட்டுண்டு கிடக்கும் வாலிப அம்னோன்கள் இன்று எத்தனை எத்தனை!

- தங்கள் ஆசையைத் தீர்த்துக்கொள்ள, வரம்பு மீறிச்சென்று தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையையும், ஏன், உயிரையுமே மாய்த்துக் கொண்டவர்கள் இன்று சபைகளில் இல்லையோ? (13:29)

- இதினால் வஞ்சிக்கப்பட்டுத் தங்கள் ஆவிக்குரிய கற்பையும் சரீரக் கற்பையும் கூட இழந்து, தங்கள் இரட்சிப்பின் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, தங்கள் தலையின் மேல் மண்ணள்ளிப்போட்டுக் கொண்டு, தங்கள் வாழ்க்கையைத் தொலைத்துத் தனிமையில் தங்கள் வீடுகளில் கிலேசப்பட்டுக் கொண்டிருக்கும் தாமார் தங்கச்சிமார் எத்தனை எத்தனை பேர் இங்கே! (13:20)

- தங்களது ஆசையைத் தீர்த்துக்கொண்ட பின் தங்களுக்கு அன்பானவர்களைத் தள்ளி விட்டு, உறவுகளை முறித்துக்கொண்டோர் எத்தனை எத்தனை பேர்! (13: 15 - 17)

தேவன் இன்றைய சபையின் வாலிபரின் அலங்கோல அசுத்த வாழ்வைக் கண்டு, ஆவிக்குரிய வாழ்வில் அடித்துக் கொன்று போடப்பட்ட அவர்களது வாழ்வைக் கண்டு, தன்னால் எதுவும் செய்யக்கூடாத ஒரு நிர்க்கதியான நிலையிலே தினமும் அவர்களுக்காகத் துக்கித்துக்கொண்டிருக்கிறார்.

இதற்குப் பின்னால் சூத்ரதாரியாய் இருந்த யோனதாபோ, "இப்போதும் ராஜகுமாரர்கள் எல்லாரும் செத்தார்கள் என்கிற பேச்சை ராஜாவாகிய என் ஆண்டவன் மனதிலே வைக்க வேண்டாம்..அம்னோன் ஒருவனே செத்தான்.இதோ ராஜகுமாரர் வருகிறார்கள்.. உமது அடியேன் சொன்னபடியே ஆயிற்று.." என்று ஒன்றும் அறியாதது போல நல்ல பிள்ளையாய் வந்து ராஜாவுக்கு சேதி சொல்லுகிறான்...

வாலிபத் தம்பி, தங்கச்சி ...

இன்றைய வாலிப உலகத்திலும் நடப்பது இது தானல்லவோ?

- காரியத்தைத் தூண்டிவிட்டு விட்டு, காரியம் கைமீறிப் போனதும் கை கழுவி விட்டு எஸ்கேப் ஆகி, நைஸாக நல்ல பிள்ளையாகி விடும் யோனதாபுகள்!

- இந்த யோனதாபுகளுக்குத் தங்கள் நண்பர்களான அம்னோன்கள் ஆவிக்குரிய வாழ்வு வாழ்ந்தாலென்ன? செத்தாலென்ன? முதலில் நண்பனோடு விசுவாசமாய் இருப்பது போலத் திரிந்தவன், இப்போது தகப்பனாகிய ராஜாவுக்குத் தன்னை விசுவாசமாய்க் காட்டிக்கொள்கிறான்..

இப்படிப்பட்ட பச்சோந்திகள் எச்சரிக்கை !

மொத்தத்தில் சபையில் நடக்கும் வாலிப அலங்கோலங்களையும், மரணங்களையும், ஒருவரால் ஒருவர் வஞ்சிக்கப்படுவதையும் கண்டு ஆண்டவர் அங்கலாய்க்கிறார்.. தினந்தோறும் துக்கித்துக் கொண்டிருக்கிறார்.

தமது ராஜகுமாரத்திகளின் ஆவிக்குரிய வாழ்வைக் கெடுத்துத் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையையும் மாய்த்துக் கொள்ளும் அம்னோன்களுக்காக நித்தம் நித்தம் கண்ணீர் விட்டு அழும் ஆண்டவர்!

# என் மகனாகிய அப்சலோமே !
# என் மகனே ! என் மகனே !
## [ Part - 2 ]

## 2.அப்சலோம்

அப்சலோமைப் போல சவுந்தர்யமுள்ளவன் ஒருவனுமில்லை..

▸ அவனைப்போல மெச்சிக் கொள்ளப்பட்டவனும் இல்லை..

▸ அவனது உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது..

▸ தன் தலைமயிர் தனக்குப் பாரமாய் இருந்ததினால் வருஷாவருஷம் சிரைத்துக் கொள்வான். (2 சாமு 14 :25,26)

சவுந்தர்யமுள்ளவன்:

▸ தாங்கள் அழகாய்க் காட்சியளிக்க வேண்டுமென்றும், தாங்கள் விரும்பும் வாலிபர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றும் விரும்புபவர்களுக்கு இவன் ஒரு முன் உதாரணம்..

A Handsome Personality..

▸ வெளிழகு, பேச்சழகு, பாட்டழகு, ஆராதனை அழகு, ஆணழகு, மேடை அழகு - இருந்தால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இன்று வேண்டப்படும் சுண்டியிழுக்கும் அழகு ! கொள்ளை அழகு !

▸ "சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது" என்ற வசனம் எல்லாம் புறந்தள்ளப்பட்டு அவைகள் பிறகு தான் ஞாபகத்துக்கு வருமோ ?

## மெச்சிக் கொள்ளப்பட்டவன்:

இப்படிப்பட்ட அப்சலோம்கள் எல்லோராலும் புகழப்படுவார்கள்.. பாராட்டப்படுவார்கள்..

"என்ன அழகா கீபோர்டு வாசிக்கிறார் !"

"என்ன சூப்பரா கிட்டார் அடிக்கிறார்!"

"செம்ம ட்ரம்ஸ் !"

"கலக்கல் ஒர்ஷிப் !"

"அண்ணாவை மாதிரி யூத் மீட்டிங் யாரும் எடுக்க முடியாது !"

"என்ன அழகா கவுன்சிலிங் கொடுக்கிறார் !"

அண்ணா ! அண்ணா ! அண்ணா !

சிறிது காலத்துக்குப்பின் இருபாலாரின் Spoken language ம், Body languageம் மாறுகிறது..

சபையின் சௌந்தரியமுள்ள வாலிபனானாலும், பெண்ணானாலும், எப்பேர்பட்ட மெச்சுதல்களைப் பெற்றவர்களேயானாலும் ஜாக்கிரதை !

## உள்ளங்கால் தொடங்கி
## உச்சந்தலை மட்டும் பழுதில்லாதவன்..

"என் பிரியமே நீ ரூபவதி.. உன்னில் பழுது ஒன்றுமில்லை.." என்று கர்த்தர் அழைக்கட்டுமே !

"சரீரத்தில் பழுதற்றவன்" என்பது பெரியதல்ல.. ஆவிக்குரிய வாழ்வில் சிந்தை முதல் நடத்தை வரையான பழுதற்ற தன்மை அல்லவோ முக்கியம் ?

▸ அவனது பேச்சுத் திறமை மட்டுமல்ல, அவனது பெர்சனாலிட்டியும் இஸ்ரவேலர் யாவரும் அவனிடத்தில் கவரப்பட்டதற்கு ஒரு காரணம் அல்லவோ ?

நீங்கள் கவரப்பட வேண்டியது இயேசுவிடமேயன்றி, மனிதரிடமோ ?

▸ இவனது சௌந்தரியமும் சரீரத்தின் பழுதற்ற தன்மையும் அனைவராலும் மெச்சப்பட்டு, புகழப்பட்டு, பாராட்டப்பட்டு, தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடப்பட்டதுமே, தன்னைப் பற்றி எண்ண வேண்டியதற்கு மிஞ்சின எண்ணத்தையும் திமிரையும் அவனுக்குள் கொண்டு வந்தது..

## தன் தலைமயிர் தனக்குப் பாரமாய் இருப்பதினால் வருஷாவருஷம் சிரைத்துக் கொள்வான்..

- தன் தலைமயிர் வளர்த்துக் கொண்டவன் இவன்- ஆனால் நசரேயன் அல்ல..

- தலைமயிரை அழகுக்காகவும் fashion க்காகவும் வளர்த்துக் கொண்டானோ ?

- He was a fashionable and a fascinating personality..

- தலைமயிர் வளர்த்துக் கொள்பவர்களுக்கும் விதம் விதமாக முடிவெட்டிக் கொள்பவர்களுக்கும், கலர் கலராக தலைமுடியை மாற்றிக் கொள்பவர்களுக்கும், மொட்டை போடுவதைக் கூட ஃபேஷனாகக் கொண்டவர்களுக்கும் இந்த அப்சலோம் ஒரு சூப்பர் பர்சனாலிட்டி..

- இன்று சபைக்குச் செல்லும் வாலிபப் பெண்களின் தலைமயிரின் நிறங்களும் ஸ்டைல்களும் தான் எத்தனை எத்தனை !

- வாலிபர்கள், பெண்களுக்குள் இந்த அழகுக்கலை உரையாடல்கள் தான் எத்தனை எத்தனை !

- விதம் விதமாக ஹேர் கட் பண்ணிக்கொள்ளும் தம்பி தங்கச்சிமாரே கவனம் !

- இந்த ஃபேஷன் தான் ஒரு நாள் இவனைக் காவு கொண்டது.. கவனம் !

இந்த அப்சலோமின் பெயரைச் சொல்லிச் சொல்லித்தான் ஒருநாள் கதறி கதறிக் அழுதான் அவன் தகப்பன் தாவீது !

இன்றும் ஆண்டவர், "என் மகனே என் மகனே" என்று புலம்பிக் கொண்டிருக்கிறார்..

இப்படிப்பட்ட அழகான, மெச்சிக் கொள்ளப்பட்ட, பழுதற்ற, அழகுக்கலையின்  மேல் நாட்டமுள்ள அப்சலோமின் வீட்டில் தான் அவனது தங்கை அழுது அங்கலாய்த்து அடைக்கலம் புகுகிறாள்..

ஒரு நாள், இரண்டு நாள் அல்ல.. இரண்டு வருடம் காத்திருக்கிறான் அப்சலோம். காலம் கனிகிறது.. தன் சகோதரன் அம்னோனை ஆள் வைத்து அடித்துக் கொல்லுகிறான் அப்சலோம்.

▸ சபையின் ஒரு வாலிபப் பெண்ணினிமித்தம் வாலிபர்களுக்குள் நடக்கும் பிரச்சினைகளையும், சண்டைகளையும், சபையை விட்டுப் போகுதல்களையும், அடிதடிகளையும் அறிவீர்களோ ?

▸ இன்று எத்தனை எத்தனை அம்னோன்களின் ஆவிக்குரிய வாழ்வு கொலை செய்யப்பட்டிருக்கிறது ?

▸ எத்தனை அப்சலோம்கள் மனதில் கசப்பையும் வஞ்சகத்தையும் வைத்துத் திரிகிறார்கள் ?

▸ எத்தனை ஆவிக்குரிய சகோதர உறவுகள் சிதைந்து சின்னாபின்னமாகிறது ?

◂ சபையின் ஒரே வாலிபன்,  ஒரே சபையின் இரண்டு வாலிபப் பெண்களுக்கு ஒரே நேரத்தில் தூது விடுவதை அறிவீர்களோ ? இதனால் முதலாமவளுக்கும் இரண்டாமவளுக்கும் சண்டை !

▸ இவைகளையெல்லாம் கண்டு "என் மகனே என் மகளே !" என்று மார்பில் அடித்துப் புலம்பிக் கொண்டிருக்கும் ஆண்டவர் !

▸ அம்னோனைக் கொன்ற அப்சலோம், கேசூருக்குப் போய் மூன்று வருஷம் அங்கே குடியிருக்கிறான். பிறகு யோவாப் ஒரு பெரிய நாடகமாடி அவனை ராஜாவிடம் அழைத்துக் கொண்டு வருகிறான்..

▸ ஆனாலும் அவன் ராஜாவின் முகத்தைக் காணாமலேயே எருசலேமிலே இரண்டு வருடம் குடியிருக்கிறான். (2 சாமு 14:28)

# கேசூரிலே...

▸ அம்னோனைக் கொலை செய்த அப்சலோம் மூன்று வருஷம் தகப்பனை விட்டு தூரம் போகிறான்..

▸ இப்படிப்பட்ட இன்றைய அப்சலோம்களுக்கு நடப்பதுவும் இதுவே..

தகப்பனை விட்டுத் தூரமாய்..சபையை விட்டு, ஐக்கியத்தை விட்டு, ஆவிக்குரிய குடும்பத்தை விட்டுத் தூரமாய்.. ஆண்டவரையும் ஊழியத்தையும் ஆவிக்குரிய காரியங்களையும் விட்டுத் தூரமாய்..

ஐயோ எத்தனை வாலிபச் செல்வங்கள் இன்று சபையையும் ஐக்கியத்தையும் அப்பா வீட்டையும் விட்டுத் தூரமாய்.. தூரமாய்..

தம்பி தங்கச்சி ! நீ இருக்க வேண்டியது கேசூரிலே அல்ல.. எருசலேமிலே !

# ராஜாவின் முகத்தைக் காணாமலே... (2 சாமு 14:28)

மூன்று வருடங்களுக்குப் பின் திரும்பி வந்தாலும் தன் தகப்பனின் முகத்தைக் காணாமலேயே இன்னும் இரண்டு வருடங்கள் எருசலேமில் குடியிருக்கிறான் அப்சலோம். ஆக மொத்தம் அவன் தன் தகப்பன் முகத்தைப் பார்த்து ஐந்து வருடங்கள் ஆகியிருந்தது..

▸ என்ன தான் எருசலேமுக்கோ - சபைக்கோ - ஐக்கியத்துக்கோ- முன்னிருந்த இடத்திற்கோ திரும்பி வந்தாலும், ஒரே சபையிலேயே இருந்தாலும்..

கர்த்தருடைய முகத்தைக் காணாமலேயே.. ஆண்டவரோடு பேசாமலேயே.. அவரோடு தனிப்பட்ட ஐக்கியம் கொள்ளாமலேயே..அப்பாவின் முகத்தைக் காணாமலேயே இருக்கும் இன்றைய அப்சலோம்கள் தான் எத்தனை எத்தனை !

"என் மகனே என் மகனே ! அப்சலோமே !" என்று புலம்பி அழும் ஆண்டவர் !

# இதற்குப் பின்பு...
# (2 சாமு 15 :1)

இதற்கு பின்பு அப்சலோம், இரதங்களையும் குதிரைகளையும் தனக்கு முன் ஓட ஐம்பது சேவகரையும் சம்பாதித்தான்..

மேலும் அப்சலோம் காலைதோறும் எழுந்திருந்து பட்டணத்து வாசலுக்குப் போகிற வழி ஓரத்திலே நின்று கொண்டு எவனாகிலும் ஒருவன் அவனை வணங்க வரும் போது அவன் தன் கையை நீட்டி அவனைத் தழுவி முத்தம் செய்வான். இந்தப் பிரகாரமாக அப்சலோம் இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டான்.
(2 சாமு 15: 1,5,6 )

▸ அப்சலோம் யோவாபின் மூலம் என்னென்னவோ செய்து எருசலேமுக்குத் திரும்பி வர நினைத்ததும், ராஜாவுக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கியதும் ஒரே ஒரு காரணத்துக்காகவே!

அவனுக்கு வேண்டியது ராஜ்யபாரம். அவனது எண்ண ஓட்டங்களில் இருந்த நோக்கம் அது ஒன்றே !

▸ அவன் ராஜாவை சந்திக்க விரும்பியதும் ராஜாவோடே ஐக்கியமாக விரும்பியதும் பெயரளவிலான ஒரே காரியத்திற்காகவே தவிர வேறல்ல..

ஆகவேதான் வேதம் சொல்லுகிறது..

# இதற்குப் பின்பு..

இப்படிப்பட்ட அப்சலோம்கள் தேவனிடம் வருவது அவரது அன்பையும் பிரியத்தையும் மன்னிப்பையும் பெற அல்ல.. அவர் தரும் ஆசீர்வாதங்களையும் உலக நன்மைகளையும் பெறவே !

▸ அவன் தனக்கென்று இரதங்களையும் குதிரை வீரரையும் சம்பாதித்தான்..

ஜனங்களை ஆரத்தழுவி முத்தம் செய்தான்..

இஸ்ரவேலருடைய இதயங்களைக் கவர்ந்து கொண்டான்..

▸ இன்றும் இப்படிப்பட்ட சௌந்தரியமுள்ள,மெச்சிக் கொள்ளப்படத்தக்க, சாதுரியமான வாலிபக் கூட்டமொன்று கர்த்தருக்கென்று ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்குப் பதிலாக, தங்களுக்கென்று ஜனங்களை சம்பாதித்துக் கொண்டிருக்கவில்லையோ ?

▸ "கர்த்தரைப் போல நம்மை நேசிப்பவர் யாருண்டு?" என்று ஆண்டவரையே சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக, ஜனங்களைத் தாங்கள் தான் அதிகமதிகமாய் நேசிப்பது போல ஆரத்தழுவி முத்தஞ்செய்து, ஜனங்களை கர்த்தரை நோக்கித் திருப்பி, அவரையே அதிகமதிகமாய் அன்பு செய்ய ஏவுவதற்குப் பதிலாக, அவர்களுடைய மனங்களையும் இதயங்களையும் தங்கள் பக்கமாய்க் கவர்ந்து களவு கொள்ளும் வாலிப அப்சலோம்களுக்கு இன்று குறைவுண்டோ ?

▸ இப்படிப்பட்ட இன்றைய அப்சலோம்களின் குறி, ஆண்டவரின் இதயத்தைக் கவர்ந்து கொள்வது அல்ல.. தங்கள் அழகு, சௌந்தரியம். வரங்கள், வல்லமைகள், உதட்டளவு அன்பு, மயக்கிக் கிறக்கும் பேச்சு - இவற்றால் மிகப்பெரிய வாலிபப் பட்டாளம் ஒன்றைத் தங்கள் பக்கம் கவர்ந்து இழுப்பதே !

▸ இப்படிப்பட்ட அப்சலோம்களின் நோக்கமெல்லாம், தாங்கள் ராஜாவாக வேண்டும், தாங்கள் சிங்காசனத்தில் உட்கார வேண்டும் - அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள் !

நாளொன்று வந்தது..

வேதம் சொல்லுகிறது.. "எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்ட 200 பேர் அப்சலோமோடே கூடப் போனார்கள்.. அவர்கள் வஞ்சகமின்றி அறியாமையினால் போனார்கள்..
(2 சாமு 15 :11)

(சிங்காசனத்திலிருந்து துரத்தப்பட்ட) தாவீது தன் முகத்தை மூடி.. வெறுங்காலால் நடந்து அழுது கொண்டு ஒலிவ மலையின் மேல் ஏறிப் போனான்..(15 : 30)

▸ இன்றும் ஒரு வாலிபக் கூட்டத்தைத் தங்கள் வசமாய்க் கவர்ந்து கொள்ளும் வஞ்சக அப்சலோம்கள் பின்னே மனதில் கள்ளங் கபட வஞ்சகமின்றி அறியாமையினால் பின்பற்றிப் போகும் வாலிபச் செல்வங்கள் எத்தனை எத்தனை !

மட்டுமல்ல.. அபிஷேகிக்கப்பட்ட தன் சொந்தத் தகப்பனையே அழ வைத்து, வெறுங்காலோடு துரத்திவிட்ட அப்சலோம் !

▸ இன்றும் ஆண்டவரை அழுது புலம்ப வைத்து, சபையில் தமது சிங்காசனத்திலிருந்து வெறுங்காலோடு துரத்திவிடும் அப்சலோம்கள் எத்தனை எத்தனைபேர் !

▸ இவர்களுக்கு ஆண்டவர் வேண்டாம்- ஆசீர்வாதம் வேண்டும் !

▸ அழகாய்ப் பாடுவோம் ! அழகாய் ஆராதிப்போம் ! அழகாய்ப் பிரசங்கிப்போம் ! அழகாய்ப் பேசுவோம் !

▸ நாங்களே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வோம்.. நீர் எங்களுக்கு அவசியமில்லை என்று சொல்லாமல் சொல்லி சபைqq நடுவிலிருந்து தேவனையே துரத்தி விட்ட நவீன அப்சலோம்கள் !

▸ இன்று ஒரு மிகப்பெரிய வாலிபப் பட்டாளத்தால் துரத்தப்பட்டு, சபைக்கு வெளியே விரட்டப்பட்டு, வெறுங்காலோடு அழுது கொண்டு போகும் ஆண்டவர்!

# உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் பழுதில்லாதவன்..

எப்பீராயீம் காட்டிலே யுத்தம் நடந்தது.. அன்றைய தினம் பெரிய சங்காரம் உண்டாயிற்று.. யுத்தம் அந்த தேசம் எங்கும் பரவ, காடு பட்சித்த ஜனம் அதிகம்..

(2 சாமு 18: 6-8)

இன்று இந்த நவீன அப்சலோம்களுக்குப் பின்னே செல்லும் வாலிப பிள்ளைகளுக்கு எதிரான பிசாசின் மிகப்பெரிய யுத்தமும், வாலிபச் செல்வங்களை அவன் சங்கரிக்கும் மகா சங்காரம் ஒன்றையும் நாம் கண் கொண்டு காணவில்லையோ ? வாலிபர்களுக்கு எதிரான இந்த யுத்தம், தேசத்தின் சபையெங்கிலும் பரவி, இன்று இதனால் அதிகமதிகமாய்ப் பட்சிக்கப்பட்டுப் போன வாலிபர்கள் தான் எத்தனை எத்தனை !

## அந்தரத்தில் தொங்கிய அப்சலோம்

- சன்னல்பின்னலான மரத்தில் மாட்டிக்கொண்ட அப்சலோம்..

தலை மயிரோடு தலையும் சிக்கிக்கொண்ட அப்சலோம்..

கோவேறு கழுதையும் அப்பாலே போக, தனியனாய்த் தொங்கிய அப்சலோம்..

- வாலிபக் கூட்டத்தைத் தங்கள் பக்கம் திருப்பி..தகப்பனாகிய ஆண்டவரைத் தள்ளி விட்டு..ஆட்சிக்கட்டிலில் சிறிது காலம் அமர்ந்து அனுபவிக்கும் அப்சலோம்கள் சன்னல்பின்னலான சிக்கல்களில் சிக்கிக்கொள்வது உறுதி !

▸ ஒரு காலத்தில் தனக்கு அழகும் fashion மாய் நீளமாய் வளர்க்கப்பட்ட அதே தலைமயிரே, பின்வரும் காலம் ஒன்றில் தலையோடு சிக்கவைக்கும் ! ஜாக்கிரதை !

▸ எப்படிப்பட்ட fashion ஆனாலும் சரி, அதுவே ஒரு நாள் அவர்களுக்குக் கண்ணியாய் வந்து அவர்களது கழுத்தைச் சுருக்குவது நிச்சயத்திலும் நிச்சயம் !

தன்னோடிருந்த ஜனம் சிதறிப் போக, கடைசியாக, தான் ஏறிப்போன கோவேறுக் கழுதையும் அப்சலோமை விட்டு அப்பாலே போயிற்று..

சரித்திரம் செல்வது இதுவே !
நாளைக்கு நடக்கப்போவதும் இதுவே !

எல்லோரும் சிதறிப் போக, கடைசியாக உடனிருக்கும் ஒன்றே ஒன்றும் அப்பாலே போய்விட, இப்படிப்பட்ட அப்சலோம்கள் நிர்க்கதியாய் அந்தரத்தில் தொங்கி, சத்துருவால் வீசப்பட்ட வல்லயங்களால் குத்திக் கொல்லப்படுவது நிச்சயம் !

▸ "ஓ" போட்ட அப்சலோம்கள், "ஓவென்று" கதறுவது உறுதி !

▸ "கொல வெறி" கிறிஸ்டியன் மெட்டுப் போட்டு வாலிபக் கூட்டம் சேர்த்த அப்சலோம்கள் ஆவியில் கொலை செய்யப்படப்போவது உறுதி !

▸ "விசிலடித்து" ஆண்டவரை வரவேற்கும் அப்சலோம்கள் (கொதவளை) குரல்வளை நெறிக்கப்பட்டு ஆவியில் சாகடிக்கப்படுவது நிச்சயம் !

▸ "நாங்க வேற லெவல் ப்ரோ.." என்று பாட்டுப் பாடும் அப்சலோம்கள் ஆவியில் "வேற லெவலில்" தொங்கிச் சாவது நிச்சயம் !

என் மகனே ! என் மகனே ! என் மகனாகிய அப்சலோமே !

தம்பி, தங்கச்சி ! அப்பாவின் புலம்பல் கேட்கிறதோ ?

"உனக்குப் பதிலாக நான் செத்தேனானால் நலமாயிருக்கும்.." என்று புலம்பினான் தாவீது ! ஆனால் தாவீதின் குமாரனாகிய இயேசுவோ - உனக்கு பதிலாகச் செத்தே போனாரன்றோ ? (2 சாமு 18 :33)

- தன்னைத் தன் மகன் தள்ளியதைப் பொருட்படுத்தாத தகப்பன்..

- தன் சிங்காசனத்தைப் பறித்துக்கொண்டதையும் தாங்கிக்கொண்ட தகப்பன் !

- தன்னை வெறுங்காலோடு துரத்தி விட்டதையும் பெரிதுபடுத்தாத தகப்பன் !

தன் சேவகரிடம் சொல்லி அனுப்புகிறான்.. "அப்சலோம் எதிர்ப்பட்டால் என்னிமித்தம்  பிள்ளையாண்டானை மெதுவாக நடப்பியுங்கள்.." என்று.. (18: 5)

இதுவல்லவோ தகப்பனின் அன்பு !

- இன்றும் ஆவியில் கொலை செய்யப்பட்டு, ஆவிக்குரிய மரணமடைந்து அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் அப்சலோம்களைக் கண்டு, கலங்கிக் கதறி அழும் ஆண்டவர் !

- தமது குமார, குமாரத்திகளுக்காக மனம் நொந்திருக்கும் ஆண்டவர் !

- தனது முகத்தை மூடிக்கொண்டு மகா சத்தமாய் அலறிக் கொண்டிருக்கும் ஆண்டவர் !

அதினிமித்தம் அன்றைய தினம் அந்த ஜெயம் ஜனத்திற்கெல்லாம் துக்கமாய் மாறிற்று..

- வஞ்சிக்கப்பட்டு, ஆவியில் கொலையுண்டு கிடக்கும் இன்றைய கிறிஸ்தவ வாலிப சமுதாயத்தைக் கண்டு மனம் நொந்து அலறி அழும் ஆண்டவரைக் கண்டு, நமது மேலோட்டமான உலக சந்தோஷமெல்லாம் துக்கமாய் மாறாதோ ?

- இன்றைய கிறிஸ்தவ சமூகம் சந்தோஷப்பட்டுக் களிகூர இங்கே என்ன இருக்கிறது ?

- காதலிலும், இசையிலும், இச்சையிலும், சரீர சுகங்களிலும், ஆசாபாசங்களிலும் சிக்கிச் சீரழிந்து சாவும் அம்னோன்களுக்காகத் தினம் தினம் துக்கித்துக் கொண்டிருக்கும் ஆண்டவரின் உடைந்த உள்ளத்தைக் கண்டு நமது இருதயங்கள் சுக்குநூறாய் உடையாதோ ?

- கர்த்தரையே துரத்திவிட்டு, தேவ மகிமையைத் தாங்கள் திருடிக்கொண்டு, ஒரு கூட்ட வாலிப சமுதாயத்தையே வஞ்சித்துப் பட்சித்துத் தாங்களும் தூக்கில் தொங்காத குறையாய்த் தொங்கி அழியும் அப்சலோம்களைக் கண்டு, "என் மகனே என் மகளே !" என்று ஆண்டவர் அழுது புலம்ப, நாம் இங்கே ஆனந்தக் கூத்தாட நமக்கு முகாந்திரங்கள் ஏது ?

[ Part - 3]

# அதோனியா

இவன் அப்சலோமின் தம்பி..
இவனது தாய் ஆகீத்..(1 இரா 1:5)

தாவீதின் வயதான நாட்களிலே ராஜாவுக்கு நெருக்கமாய், அவரது அருகிலிருந்து, அவருக்கு உதவியும் பணிவிடையும் செய்யும்படி இஸ்ரவேலின் எல்லையிலெங்கும் தேடப்பட்டு ராஜ சமூகத்தில் கொண்டுவரப்பட்ட மிக அழகான கன்னிகை அபிஷாக்..
(1 இரா1:2-4)

- இவள் ராஜாவின் மணவாட்டியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவள்..
- ராஜாவுக்கு நெருக்கமாய் இருக்கும்படி..
- ராஜ சமூகத்தில் நிற்கும்படி..
- ராஜாவுக்குப் பணிவிடையும், ஊழியமும், உதவியும் செய்யும்படி அநேகர் நடுவே அவள் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டவள்..
- அவள் ஒரு கற்புள்ள, கறைபடாத கன்னிகை..
- மிக அழகான அபிஷாக்..

தேவன் இன்று தமது சபையைத் தமக்கு மணவாட்டியாக..கற்புள்ள கன்னிகையாக..உள்ளாகப் பூரண அழகுள்ளவளாக..அவருக்கு நெருக்கமாகவும், அவருக்கு மிக அருகிலும் இருக்கும்படியாக..அவரது சமூகத்தில் நின்று அவருக்குப் பணிவிடையும்  ஊழியமும் செய்யும்படியாகவும் பூச்சக்கரத்திலுள்ள ஜனங்களிலெல்லாம் இருந்து தெரிந்து கொள்ளவில்லையோ ?

ஆனால் இந்த அதோனியாவோ.. அப்சலோமின் சொந்தத் தம்பி அல்லவோ ?

"நான் ராஜா ஆவேன்" என்று தனக்கு ஒரு கூட்டத்தைச் சேர்த்தான் இந்த அதோனியா..

அப்சலோமிலிருந்த அதே ஆசையும் நோக்கமும் இவனுக்குள்ளும் இருந்தது ஆச்சரியம் அல்லவே !

அவனால் செய்யப்பட்ட ராணுவப்புரட்சி, ஏற்ற சமயத்தில் தீர்க்கன் நாத்தானின் தேவ செயலால் முறியடிக்கப்பட, தாவீதின் சிங்காசனத்தில் ராஜாவாகிறான்  சாலமோன்..

▸ ஆனாலும் அந்தோனியாவின் ஆசை அடங்கவே இல்லை..

▸ நேரடியாக ராஜாவாக முடியாவிட்டாலும் பின்வாசல் வழியே நுழைய முயன்று, "அபிஷாக்கை" மனைவியாக்க வேண்டுதல் வைக்கிறான்..

▸ நோக்கமென்னவோ "நான் ராஜா ஆவேன்.." என்பது தான். அபிஷாக்கை அடைந்து, ராஜ்யத்தை உடைத்து ராஜா ஆவதே அவனது திட்டம்..

ஆனால் அவனது ஆசை மட்டுமல்ல.. அவன், தானும் கொல்லப்படுகிறான்..

▸ இன்று கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு நியமிக்கப்பட்டு, அவருக்கு நெருக்கமாயிருந்து, அவரது சமூகத்தில் பணிவிடை செய்யும் கறைதிரையற்ற பரிசுத்த கன்னிகையாகிய மணவாட்டி சபையைத் தனதாக்கிக் கறைபடுத்தி, தேவராஜ்யத்தை அல்ல.. அல்ல தங்களது ராஜ்யத்தையே நிலைநாட்டத் துடிக்கும் அதோனியாக்கள் போன்ற வாலிபர்..

▸ இவர்களது நோக்கம் தேவ ராஜ்யம் அல்ல..

▸ தேவனால் தெரிந்து கொள்ளப்படாமல், அழைக்கப்படாமல், தாங்களே ஊழியத்துக்குள் நுழைந்து, சபையை ஏதோ ஒரு வழியில் அடைந்து தனதாக்கத் துடிப்பவர்கள்..

▸ இவர்கள் சபை என்னும் மணவாட்டியை அபகரித்து, அதனால் வரும் உலக லாபங்கள் மேலேயே குறியாய் இருப்பவர்கள்..

▸ இவர்களுக்கு அபிஷாக்குகளின் அழகின் மீதும் ஒரு கண்.. அவள் மூலம் கிடைக்கும் ஆதாயங்கள் மேலும் இன்னொரு கண்..

▸ இவர்கள் மணவாட்டியைக் கறைபடுத்தி, சபையில் தாங்களும் கறையாய் இருப்பவர்கள்..

▸ இவர்கள் தங்களுக்கென்று ஒரு கூட்டத்தை எப்போதும் தங்களருகில் வைத்திருப்பார்கள்..

▸ இவர்கள் தங்கள் சுய பெலத்திலும் மாம்ச பெலத்திலும் சபையையும் ஊழியங்களையும், தங்கள் நயவஞ்சகப் பேச்சினாலும், பொய்யான தீர்க்கதரிசனங்களாலும், மாறுபாடான உபதேசங்களாலும் களங்கமற்ற சபையை வஞ்சித்துத் தாங்கள் கையகப்படுத்தத் துடிக்கும் வாலிபர்கள் !

கடைசியில் அதோனியா ராஜாவாகவில்லை.. அகாலமாய்க் கொல்லப்படுகிறான் அவன்..

தாவீதின் முதல் ராஜ குமாரனான வாலிப மகன் அம்னோன்..

இரண்டாவது பிள்ளையாண்டான் அப்சலோம்..

மூன்றாமவன் அதோனியா..

மூவரும் வால வயதிலே கொல்லப்படுகின்றனர் !

▸ பெலவானாம் கர்த்தரின் கரங்களில் துலக்கமான அம்புகளாய் இருக்க வேண்டிய இன்றைய நமது சபைகளின் வால வயதின் குமாரர், தாங்களே தங்களால் சத்துருவின் அம்பறாத்தூணியை நிரப்பியது ஏனோ ?

▸ சபையின் ராஜகுமாரரான அம்னோன்களின் கூட்டமொன்று சபையின் ராஜகுமாரத்திகளையே மோகித்து, ஏக்கம் கொண்டு, காதல்வயமும் வியாதியும் பட்டு, எல்லை தாண்டிச் சென்று, தாங்களும் சீரழிந்து, சக ராஜகுமாரத்திகள் போன்ற வாலிபப் பெண்களின் வாழ்வையும் இந்த காதல் என்ற மோகத்தால் சீரழித்து, கடைசியில் சத்துருவால் கொல்லப்பட்டுக் கிடக்கும் அம்னோன்- தாமார் போன்ற கூட்டம் ஒன்றுக்காகத் தினம் தினம் துக்கித்து அழும் ஆண்டவர் !

▸ அழகுக்கும் மெச்சுதல்களுக்கும், நவீன யுக fashion களுக்கும் தங்களையே விற்றுப்போட்டு, தேவன் தங்களுக்குத் தந்த வரங்களையும் தாலந்துகளையும் தங்களை உயர்த்திக் காட்டுவதிலும், ஜனத்தைத் தங்களண்டை ஈர்ப்பதிலுமே குறியாயிருந்து, சபையின் நடுவிலிருந்து இயேசு என்னும் ராஜாவை வெறுங்காலோடு துரத்திவிட்டு, அவரது மகிமையின் சிங்காசனத்தைத் தாங்களே அபகரிக்கத் துடிக்கும் சபையின் வாலிப ராஜகுமாரர்களாகிய அப்சலோம்களே !

ஆவியில் கொல்லப்பட்டு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் உங்களைக் கண்டு "என் மகனே என் மகளே !" என்று அலறிப் புலம்பிக் கொண்டிருக்கும் ஆண்டவரின் அங்கலாய்ப்பின் அலறல் கேட்கிறதோ ?

▸ ராஜாவின் ராஜ குமாரத்திகளின் மேல் கைவைக்கும் அம்னோன்களைக் கண்டும்..

ராஜாவின் சிங்காசனத்தின் மேல் கண் வைக்கும் அப்சலோம்களைக் கண்டும்..

ராஜாவின் மணவாட்டியின் மேலேயே மனம் வைக்கும் அதோனியாக்களைக் கண்டும்..

அழுது புலம்பும் ஆண்டவரைக் கண்டு இன்றைய நமது சந்தோஷமெல்லாம் துக்கமாய் மாறாதோ ?

ஆவிக்குரிய வாழ்வில் கொல்லப்பட்டுக் கிடக்கும் இம்மூவகை இளைஞர் கூட்டம் ஒன்றுக்காக அனுதினமும் அழுது புலம்பும் ஆண்டவரின் குரல் கேட்கிறதோ ?

"என் மகனே ! என் மகனே !
அப்சலோமே என் மகனே ! என் மகனே !

AN ARTICLE BY

அடைபட்ட அக்கினி
Pr. Romilton, Delhi
9810646981